O.S. No:46/2017
பெயர் : வசந்தி
**வா.சா. 1**
30/11/2022
**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்கின் சொத்தின் நான்கெல்லைகள் வடக்கே நாராயணசாமி மடம், தெற்கே உப்பிலிராஜ் வீடு, மேற்கு பக்கம் மாங்கொல்லை, கிழக்கே நாகராஜ கொல்லை உள்ளது. வழக்கு சொத்திற்கு பாதை நாராயணசாமி மடத்தின் வழியாக தான் போகவேண்டும். வேறு பாதை கிடையாது. தற்போது நாராயணசாமி மடம் என்பது உப்பிலிராஜ் மற்றும் திருவேங்கடம் ஆகியோரிடம் தான் சுவாதீனம் இருந்து வருகிறது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தற்போது நான் போய் வந்துக்கொண்டு தான் இருக்கிறேன். நாராயணசாமி மடம் என்பது தற்போது பூட்டப்பட்டு தான் வைத்திருக்கிறார்கள். உப்பிலிராஜ் மற்றும் திருவேங்கடம் ஆகியோர் கதவு அமைத்து பூட்டி வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் பூட்டிதான் வைத்திருக்கிறார்கள். தாவா சொத்தை நான் எந்தகாலத்திலும் போய் பார்த்ததும் இல்லை என்றும், தாவா சொத்தை பிரதிவாதிகள் தான் தங்களுடைய அனுபவத்தில் வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றும், நான் வழக்கிற்காக தாவா சொத்திற்கு போய் பார்த்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு 1999 ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. நான் பிறந்து வளர்ந்தது சுவாமிமலை. வாதிகளுக்கு நான் ரத்த உறவு இல்லை என்றால் சரியல்ல. சாட்சி தாமாக சொல்கிறார். செண்பகம் எனக்கு மாமியார், 2 ஆம் வாதி, 3 ஆம் வாதிகள் நாத்தனார். 4 ஆம் வாதி என்னுடைய மச்சினர். நான் திருமணம் ஏற்பட்டதின் காரணமாக உறவு என்றும், எனக்கு விவரம் தெரியாமல் வாதிகள் எனக்கு ரத்த உறவு என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. 3 வது பிரதிவாதி ரங்கராஜன் என் கணவரின் அண்ணன். 4 ஆம் பிரதிவாதி ராதாகிருஷ்ணன் என் கணவர் ஆவார். தாவா சொத்துக்கள் ஆரம்பத்தில் சீனிவாச செட்டியார், கோவிந்தசாமி செட்டியார், திருமலை செட்டியார் ஆகியோருக்கு பாத்தியப்பட்டிருந்தது. மேற்படி நபர்களுக்கு பாத்தியப்பட்டது என்று காட்டக்கூடிய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 1924 வருட பாகப்பிரிவினை பத்திரத்தின் அசல் ஆவணம் யாரிடம் உள்ளது என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் வழக்கு சொத்து யாருக்கு கிடைத்தது என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது. வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் ஆவணம் என்னிடம் இருக்கிறது. இன்றைய தேதிவரை வா.சா.ஆ.2 உடைய அசல் ஆவணம் என்னிடம் இல்லாததால் தான் அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாமல் பதிவு நகலை தாக்கல் செய்துள்ளேன் என்றும், வா.சா.ஆ.2 அசல் ஆவணம் என்னிடம் இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3, 1962 வருடம் ராமசாமி செட்டியார் பெயருக்கு எழுதிகொடுத்த கிரைய ஆவணத்தின் அசல் என்னிடம் தான் உள்ளது. வா.சா.ஆ.3 இன் அசல் ஆவணம் என்னிடம் இல்லை என்றும், என்னிடம் இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 04/12/1999 ஆம் தேதியிட்ட கிஸ்து ரசீது வா.சா.ஆ.4 இல் புல எண் மற்றும் நிலத்தின் அளவு

குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ராமசாமி செட்டியார் பெயரில் எவ்வளவு நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்கள் இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.4 ஆவணத்திற்கும் வழக்கு சொத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே நடைபெற்ற அசல் வழக்கு எண் 534/1968 வழக்கின் விவரம் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது. வா.சா.ஆ.7 ஆவணத்தின் கீழ் பகுதியில் சொத்து விவரம் கையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கெல்லைக்கும் இந்த வழக்கு சொத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ-5 இல் சொல்லப்பட்டுள்ள 534/68 வழக்கில் இந்த பிரதிவாதிகள் தரப்பினரல்ல என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ-6 புகாரின் அடிப்படையில் என் முன்னிலையில் காவல் நிலையத்தில் இந்த பிரதிவாதிகளை அழைத்து விசாரணை செய்யவில்லை. போலிசார் ஏற்கனவே விசாரித்ததாக சொன்னார்கள். வா.சா.ஆ.6 ஆவணத்தில் புகார் கொடுக்கப்பட்ட தேதி கையால் பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மற்ற எழுத்துக்கள் கணினியால் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.6 ஆவணத்திற்கும் இந்த பிரதிவாதிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும் மேற்படி ஆவணம் வழக்கிற்காக பிற்பாடு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. உண்மையிலேயே வா.சா.ஆ.6 புகாரை நான் காவல் நிலையத்தில் கொடுத்திருந்தால் மனுதார் மற்றும் எதிர்மனுதார்களை ஒரே அழைத்து விசாரித்திருப்பார்கள் என்றும், அவ்வாறு நான் சொல்வது போல் புகார் கொடுக்கப்படாததால் தான் எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் என் முன்னிலையில் விசாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 வில்லங்க சான்றிதழ் இரண்டாம் பிரதிவாதிக்கு உரிமை பாத்தியம் உடையது என்பதால் தான், ஒன்றாம் பிரதிவாதிக்கு உரிமை பாத்தியம் செய்யப்பட்டுள்ளது என்று வில்லங்க சான்றிதழில் குறிப்பு உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ஆவணத்திற்கும் எனக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ஆவணத்தில் நகல் பெறுபவர் பெயரில் என்னுடைய பெயரோ, எனக்கு சம்மந்தமான வாதிகள் பெயரோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணத்தின் தகவல் யாரால் எப்போது பெறப்பட்டது என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று இந்து அறநிலை துறையில் கொடுத்துள்ள விளக்கம் பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் கொடுத்த விளக்கத்தின் அடிப்படையில் இந்து அறநிலை துறையினரால் என்ன தீர்வு கொடுக்கப்பட்டது என்ற விவரமும் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.10 ஆவணத்திற்கும் எனக்கு எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு வேண்டாத நபர்கள் கொடுத்த வா.சா.ஆ.10 ஆவணத்தை வழக்கிற்கு சம்மந்தம் இல்லாமல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1952 ஆம் வருடம் கோவிந்தராஜுலு செட்டியார், கோவிந்த செட்டியார் மகன் நாயனாசாமி என்பவருக்கு கரவோலை மூலமாக வழக்கை சொத்தை எழுதி கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 28/11/1957 தேதியில் நாயனசாமி வழக்கு சொத்துக்கள் சம்மந்தமாக திருவிடைமருதூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் உயில் சாசனம் எழுதி பதிவு செய்துள்ள விவரம் எனக்கு தெரியாது. அதன் தொடர்ச்சியாக

04/09/1958 ஆம் ஆண்டு நாயனாசமி, 2 ஆம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்து சம்மந்தமாக ஒரு உயில் சாசனம் எழுதிகொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியாது. அதனடிப்படையில் தான் 06/07/2015 அன்று 2 ஆம் பிரதிவாதி, 1 ஆம் பிரதிவாதிக்கு திருவிடைமருதூர் சார்பதிவாளர் அலுவலகம் மூலமாக தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிகொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதிகளால் சொல்லப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் பிரதிவாதிகளிடம் தான் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் 2015 ஆம் ஆண்டு பதிவு செய்த ஆவணங்கள் மட்டும் எனக்கு தெரியும். வழக்கு சொத்து பிரதிவாதிகளுக்கு தான் பாத்தியப்பட்டது என்று தெரியும் வழக்கு சொத்திற்கு அருகாமையில் என் மாமியார் சொத்து இருப்பதால், வழக்கு சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய் கட்சி செய்து வழக்கு நடத்துகிறேன் என்றால் சரியல்ல. பிராதில் குறிப்பிட்டுள்ள வழக்கை நிரூபிக்கும் வகையில் அதற்கு தொடர்புடைய ஆவணங்கள் எதையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் இந்த வழக்கு சொத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் குறித்து எந்தவித விவரமும் தெரியாமல் தற்போது நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 1, 2 பிரதிவாதிகள் சொல்லியுள்ள கட்சி பற்றி எனக்கு தெரியாது என்றால் வழக்கு சொத்து அவர்களுடைய இடம் என்று சொல்லியுள்ளார்கள். நான் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு உண்மை தன்மை இல்லை என்பதால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கில் உண்மை தன்மை இல்லை என்பதால் தான் இந்த வழக்கில் அசல் ஆவணங்கள் எதுவும் என்னால் தாக்கல் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல.

ஒப்பம்(xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

**/உண்மை நகல்/**
ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.